REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 14உ புதன் (27—4—55) ★ ★ வெளியீடு: சித்திரை 15உ வியாழன் (28—4—55) [இதழ் 270

சென்னைத் தொழிலாளருக்கு......

இவ்வாண்டு சுதந்திர தினமான ஆக. 15-ந் தேதியன்று சென்னை நகரில் தொழிலாளருக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் துவங்கப்படும் என்று தெரியவருகிறது.

சென்ற ஜனவரி 26-ந் தேதியன்று, கோவையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

தொழிலாளிகள் மிகுந்துள்ள மதுரை, சேலம், திருச்சி, உடுமலைப்பேட்டை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி, கோழிக்கோடு, கண்ணனூர், திருப்பூர், பெரோக், மங்களூர் முதலிய இடங்களிலும் இத்திட்டம் துவக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தியப் பேரரசின் அன்புத் தொல்லை?

திராவிடர்களின் கட்டாய இட மாற்றம்!

தொழில் பெருகாததின் உரு பலன்

போபால் பகுதிக்கு இரண்டாம் உழவர் படை

தி.-கொ.-விலிருந்து 112 குடும்பங்கள் ஏற்றுமதி

திருவனந்தபுரம், ஏப். 26—

112 குடும்பத்தினர், உழவுத் தொழிலை மேற்கொள்வதற்காக இன்று போபால் பிரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். ஏற்கனவே, 74 குடும்பத்தினர் இங்கிருந்து, போபாலில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே போபால் சென்று தங்கியுள்ள குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு பத்து ஏகர் நிலம் தரப்பட்டிருக்கிறது. அதைப் பண்படுத்திப் பயிரிட, தேவைப்படும் நவீன உழவுப் படைகளை மத்திய அரசாங்கம் அவர்களுக்குக் கடனாகக் கொடுத்து வருகிறது.

திரு-கொச்சியின் பல பகுதிகளிலிருந்தும் மேற்படி குடும்பங்கள் சென்றுள்ளன.

சென்னையில் மே தின விழா

★

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னையில் 1-5-55 அன்று நடைபெறும் மே தின விழாவில் பங்கு கொள்கிறார்.

புதுவையில் தேர்தல்

புதுவை (மாநில) சட்ட சபைக்கும், அதன் 16 நகர சபைக்கும் வரும் ஜூலை 18-க்கும்—23-க்குமிடையே தேர்தல்கள் நடைபெறுமென புதுவை பிரதம கமிஷனர் ஷேவல்கிஸ் அறிவித்துள்ளார்.

அதிக எண்ணிக்கையுள்ள கட்சி அரசியலால்!

மக்கள் பிளவுபடுவதாக திரு-கொச்சி முதலமைச்சரின் பிரலாபம்!

திருவனந்தபுரம், ஏப். 26—

"அதிகப்படியாகக் கட்சி அரசியல் பெருகி இருப்பதால் தான், திரு—கொச்சி மக்களிடை பிளவு அதிகரித்து இருக்கிறது," என்று முதலமைச்சர் கோவிந்த மேனன் குறிப்பிட்டுள்ளார்.

திரு—கொச்சிக்கு இவ்வளவு அதிகப்படியான கட்சி அரசியல் அவசியந்தானா என்பதில் தனக்குள்ள ஐயப்பாட்டையும் அவர் அறிவித்துள்ளார்.

திருவாங்கூர் நகராட்சி மன்றம், முதலமைச்சர் கோவிந்தமேனனுக்குக் கொடுத்த வரவேற்பின்போது அவர் மேற்குறித்தவாறு குறிப்பிட்டார்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் நீங்கலாக மற்ற அரசியல் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் மேற்படி வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை.

நாற்பது உறுப்பினர்களைக் கொண்ட திருவனந்தபுரம் நகராட்சி மன்றத்தில் மக்கள் சோஷலிஸ்டு கட்சி தான் தனிப்பெரும்பான்மைக் கட்சியாக இருந்து வருகிறது. ம. சோ. கட்சியைச் சேர்ந்த மேயர் கிருஷ்ணப் பிள்ளைதான், வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுத்தவர். வரவேற்பு அளிக்க முன்வந்ததற்காக ம. சோ. கட்சியிலிருந்து விலக்கப்பட்ட இரு நகர சபை உறுப்பினர்களும் வரவேற்பில் கலந்து கொண்டனர்.

இரப்போர் இல்லாத வட இந்திய நகரம்?

நாகபுரி நகர சபையின் தீவிரம்

வட இந்திய நகரமான நாகபுரியில், இப்போது பிச்சைக்காரர்களே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'பிச்சை எடுப்பது குற்றம்,' என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்ததினால், இப்போது அங்கே 'ஏற்போர்' யாரும் இல்லையாம்!

சர்க்கார் உதவியுடன் இயங்கும் பிக்ஷா நிவாரண சங்கம், பிச்சைக்காரர்களை நாகபுரி நகர எல்லைக்கு அப்பால் விரட்டும் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்து விட்டதாம்.

உண்மையில் நடைபெற்றது, 'பிச்சைக்காரர்கள் வாழ்வு பெற்று விட்டார்கள்,' என்பதல்ல!

நாகபுரியில் இரந்து வாழ்ந்தோர், இப்போது, அந்த நகரின் இருபுறமும் உள்ள சொண்டியா, வார்தா போன்ற நகரங்களுக்குச் சென்றுவிட்டார்களாம்!

நாகபுரியில் 2,000 பிச்சை எடுப்போர் இருக்கிறார்கள் என்று மதிப்பிட்டு, அவர்களுக்கு இடமளித்து ஆதரவுகாட்ட பிக்ஷா நிவாரண சங்கம், அனாதை விடுதிகளில் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்ததாம்; ஆனால், இப்போது, 80 பேர்தான் அந்த விடுதிகளில் உள்ளனர் என்று தெரிகிறது; மற்றவர்கள் நகரை விட்டு ஓடிவிட்டனர்.

'இரந்து' வாழ்ந்தோரை நாகபுரியை விட்டு வெளியேற்றும் இக்காரியத்தை பிக்ஷா நிவாரண சங்கம் மூன்று மாத காலத்தில் செய்து முடித்ததாம். இந்த சங்கத்திற்காகும் செலவை நாகபுரி நகர சபையும், சர்க்காரும் ஏற்றுக் கொள்கிறதாம்.

மத்தியப் பிரதேச வரவு-செலவுத் திட்டத்தில் இரண்டு லட்சம் ரூபாய்கள் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது.

'இசையரசு' தண்டபாணி தேசிகர்

இசைத் துறை பேராசிரியராக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நியமனம்

அண்ணாமலைநகர், ஏப் 25—

'இசையரசு' எம். எம். தண்டபாணி தேசிகர், அண்ணாமலை பல்கலைக் கழக இசைப் பிரிவின் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் 'சிண்டிகேட்' உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் இன்று காலை சென்னையிலிருந்து இங்கு வந்து சேர்ந்து தமது புதிய பதவியை ஏற்றுக் கொண்டுவிட்டார்.

ஒரு அறிவிப்பு

"'விடுதலை' வெளியூர் பதிப்பு 16—4—55 இதழில் 'திருவிடமருதூரில் க. து. கரைகிறது' என்ற செய்தி முழுவதும் பொய்; அதற்கு ஆதாரமே கிடையாது.

"இங்குள்ள வள்ளுவர் மன்ற தோழர்கள், எந்தக் கட்சி சார்புமற்றவர்கள்; அதன் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையே 11; இதில் 25 பேர் எப்படி தி. மு. க.-விலிருந்து விலகியிருக்க முடியுமோ தெரியவில்லை.

"இவ்வூர் வள்ளுவர் மன்றத் தோழர்கள் யாரும் இதுவரை தி. மு. க.-வில் உறுப்பினர்களாக இருக்கவில்லை; உறுப்பினர்களல்லாத அந்தத் தோழர்கள் எப்படி தி. மு. க.-விலிருந்து விலக முடியுமோ தெரியவில்லை!

"அதோடு, அந்த அறிக்கை, தி. க. செயலாளர் 'குறள் பித்தன்' தந்ததாக 'விடுதலை' அறிவிக்கிறது; ஆனால், இங்கு யாரும் அந்த பெயருள்ளவர் இல்லை.

"இவ்வூரில், தி. க.-வுக்கு அமைப்பே இல்லை என்கிற போது, தி. க.-வுக்கு செயலாளர் எங்கிருந்து முளைத்தாரோ தெரியவில்லை!

"எனவே, அந்த அறிக்கை, வழக்கமான சரடு!

"எங்கள் ஊரைப் பொறுத்த வரை தி. மு. க.-விலிருந்து யாரும் விலகவில்லை என்பதை இதன் மூலம் தெரிவிக்கிறேன்,"

என்று, திருவிடமருதூர் தி. மு. கழகத் துணைச் செயலாளர் டி. டி. சின்னதுரை அறிவிக்கிறார்.

இந்தியரின் சொந்தப் பள்ளி

இனவேற்றுமையின்றி வளர்கிறது

ஜோகன்ஸ்பர்க், ஏப். 26—

"இங்கு இந்தியர்கள் சொந்த முயற்சியினால் ஏற்படுத்திய பள்ளிக்கூடம் வேகமாக வளர்ந்து வருகிறதாம். இதுவரை 400 குழந்தைகள் அந்தப் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். ஆப்பிரிக்கர், இந்தியர், ஐரோப்பியர் என்ற எல்லா இனங்களையும் சேர்ந்த ஆசிரியர்களைக்கொண்ட பள்ளிக்கூடம் தென்னாப்பிரிக்காவிலேயே இது ஒன்றுதான்.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—12/55

மே விழா

திராவிட நாட்டின் ஏழை எளிய பாட்டாளித் தொழிலாளத் தோழர்களின் அமைப்பாக இருந்து பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் ஆங்காங்கு 1—5—55-ஆம் நாளிலிருந்து 10—5—55-ஆம் நாள் வரையில், ஏதேனும் ஏற்ற ஒரு நாளில் உரிய சிறப்பான முறையில் கொண்டாடும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்கள் துண்டு அறிக்கைகள் வழங்குதல், ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல் போன்ற முறைகளில் விழாவைக் கொண்டாடுவார்களாக! பல்வேறு துறைத் தொழிலாளர்களை முன்னேற்றக் கழகக் கொடியின்கீழ் ஒன்றுதிரட்டுவார்களாக!

மே நாள் நோக்கம் திராவிடத்தின் திக்கெட்டும் பரவுமாக!

"அறிவகம்" சென்னை 26—4—55 } இரா. நெடுஞ்செழியன், பொதுச்செயலாளர், தி. மு. க.

****

வரி தராமல் ஏய்த்த அகில இந்திய வானொலி அதிகாரி!

தனது காரை சர்க்கார் சொத்து என்று கூறினாராம்!

புதுடில்லி, ஏப். 26—

அகில இந்திய வானொலியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர், அமெரிக்காவுக்கு வேலை நிமித்தமாய் அனுப்பப்பட்டிருந்தாராம். அவர் திரும்பிவரும்போது, 'போர்டு மெர்குரி சலூன் கார்' ஒன்றை வரி கட்டாமல் இந்தியாவிற்குள் கொண்டுவந்துவிட்டாராம்.

"இதுபற்றி சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தனர்?" என்று இந்தியப் பாராளுமன்ற மேல்சபை கப்பட்டியில் கேள்வி ஒன்று கேட்டது.

அதற்குப் பதில் அளித்த ரெவின்யூ அமைச்சர் எம் சி. ஷா, "இது பற்றிய பிரச்சினை விசாரணையில் இருக்கிறது," என்று கூறினார்.

இந்த அதிகாரி தன்னுடைய காரை, 'சர்க்காரின் சொத்து,' என்று கூறி, வரி கட்டாமல் இந்தியாவிற்குள் கொண்டுவந்தாராம்!

சித்தூர் கோட்டை!

சரித்திரப் புகழ் பெற்ற சித்தூர் கோட்டையை மராமத்து செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப்பதாயும்; ஏதாவது ஒரு தேசிய வேலைக்கு அக்கோட்டையைப் பயன்படுத்த யோசிக்கப்பட்டு வருவதாயும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27—4—'55 புதன்

முதற்படி

முதல் பெரும் போரின் இறுதியில் தோன்றிய பிரான்சின் வீழ்ச்சிப் படலம், இரண்டாம் பெரும் போரின் முடிவில் ஒரு முடிவிற்கு வந்துவிட்டது. இந்த வரலாற்று உண்மையை, மற்றவர் அறிந்திருந்ததைக்காட்டிலும் பிரான்சின் அரசியல் தலைவர்கள் அறிந்தே இருந்தார்கள். இருந்தாலும் நிலைமையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, வளர்ந்துவந்துள்ள நிலைமைக்கொப்ப பிரான்சின் எதிர்காலத்தைச் செப்பனிட்டுக்கொள்ள அத்தலைவர்கள் ஒருப்படவில்லை. பழைய போக்கிலேயே நடந்துகொள்ள முயற்சித்து வந்தனர்.

பல நாள் பழக்கம் மட்டுமே பிரான்ஸ் அரசியல் தலைவர்களின் மாறு மனத்துக்குக் காரணம் அல்ல. பிரான்ஸ் பெற்றுள்ள பலக்குறைவிற்கேற்ப, அரசியல் விழிப்புணர்வும், சுதந்திர ஒருமைப்பாடும் பிரான்ஸ் ஏகாதிபத்தியத்தின் கீழ் சிக்குண்டு கிடந்த குடியேற்ற நாடுகளிடம் உருவாகவில்லை. குடியேற்ற நாடுகளிடம் காணப்பட்ட இவ்வொற்றுமைக் குறைவை, வீழ்ச்சியுற்ற பிரான்சின் அரசியல் வாதிகள், அலட்சியப்படுத்தினதோடு மட்டுமின்றி, அதை அடக்கி ஒடுக்குவதின்மூலம், பிரான்சை மீண்டும் ஒரு முறை முன்னுள் நிலைக்குக் கொண்டுவந்துவிடலாம் எனவும் தவருக எண்ணிக்கொண்டனர்.

உலக மாறுதலின் வேகம், தங்களுடைய போக்கைத் தவருனது என மெய்ப்பித்துக் கொண்டு வருவதை, நாள் தவருமல் பிரெஞ்சு அரசியல்வாதிகள் கண்டுவந்தனர். எனவே, தாங்கள் விரும்பினுலும் விரும்பாமற்போனுலும், குடியேற்ற நாடுகளின் சுதந்திர தாகத்தை இனியும் நீண்ட நாளைக்கு அடக்கி வைத்திருக்க முடியாது என்ற உண்மையை மெள்ள மெள்ள அவ்வரசியல் வாதிகள் உணரத் தொடங்கினர். எனவே ஏகாதிபத்திய ஏற்பாட்டிலிருந்து, சாதாரண ஒரு அந்தஸ்துக்கு மாறும் முறையைக் கூடுமான வரை அதிர்ச்சியற்றதாகச் செய்யவும், குடியேற்ற நாடுகளுடன் புதிய நட்புறவு உருவாவதைச் சாத்தியமாக்கவும், அரசியல் வாதிகள் முயலத் தொடங்கினர்.

அம்முயற்சியின் விளைவுதான் பல ஆண்டு காலம் தனது ஆதிக்கத்தின் கீழ் கட்டுண்டு கிடந்த டுனீசியாவை, முடிவாக பிரான்ஸ் விடுவிக்க உடன்பட்டு இருப்பதாகும். டுனீசியா கூடிய விரைவில், முழுச் சுதந்திரம் பெற்று விளங்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. ஏற்பட்டுள்ள ஏற்பாடு, டுனீசியாவை அந்நிலைக்குக் கொண்டு செல்லும் முதற்படி என்பது ஒருக்காலும் மிகையாகாது.

டுனீசியாவிற்கும் பிரான்சிற்கும் ஏற்பட்டுள்ள இடைக்கால அரசியல் ஏற்பாட்டின் விளைவு, வட ஆப்பிரிக்காவில் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள மொராக்கோ, அல்ஜீரியா ஆகிய இரு நாடுகளிலும் உருவாகியுள்ள உரிமை வேட்கையைத் தீவிரமாக்கியே தீரும். அந்த இரு நாடுகளும், பிரான்சின் அனுமதி பெருமலேயே விடுபடுவதும், பிரான்சின் அரவணைப்பின்கீழ் சுயாட்சி பெறுவதும், அந்த நாடுகளின் சுதந்திர இயக்கத்திற்குப் பிரான்ஸ் காட்ட இருக்கும் சலுகையையும், அச்சலுகையைத் தர முன்வரும் கால தாமதத்தையும் பொறுத்திருக்கிறது.

இந்தோ-சீனுவிலும், பிரெஞ்சிந்தியாவிலும் கால தாமதம் செய்ததால் பெற்ற படிப்பினையை, அல்ஜீரியா, மொராக்கோ விஷயத்தில் சீர்தூக்கிப் பார்த்து முடிவு கட்ட பிரான்ஸ் தவறிவிடக் கூடாது என்றுதான் எவரும் எண்ணுவர். ஆனல், பிரான்சின் சென்றகால நடைமுறை, அவ்வெண்ணத்தை உறுதி செய்வதாக இல்லை.

மொராக்கோவில் குடியேறியுள்ள பிரெஞ்சுக்காரர்கள் பொருளாதாரத் துறையில் அங்கு பலம் பெற்றிருப்பது போன்று, டுனீசியாவில் தங்கியுள்ள பிரெஞ்சுக்காரர்கள் பலம் பெற்றிருக்கவில்லை. அது போலவே, டுனீசியா ஆட்சி மன்றத்தில், மொராக்கோவில் உள்ளது போன்ற ஆதிக்கம், பிரெஞ்சுக்காரர்களுக்கு இல்லவுமில்லை. எனவே, அல்ஜீரியா, மொராக்கோ விஷயத்தில் பிடிவாதம் காட்டி வருவது போல, டுனீசியா விஷயத்தில் பிரான்சால் காட்ட முடியவில்லை.

மற்ற இரு நாடுகளிலும் இல்லாத அளவு ஒற்றுமை, டுனீசிய விடுதலைக் கிளர்ச்சியில் இருந்து வருவதும், டுனீசியா முதற்கண் விடுபட்டதற்குரிய காரணமுமாகும். அதுவுமன்றி, அராபிய நாடுகளுடன் டுனீசியா கொண்டுள்ள நெருங்கிய தொடர்பும், அது பெற்ற சுயாட்சிக்கு மற்றொரு காரணமாகும்.

சுதந்திர இயக்கங்கள் அனைத்திலும் ஈடுபடுகிறவர்கள் அடைகின்ற எண்ணத் தொலையா துன்பத்தை, டுனீசிய மக்களும் அனுபவித்தே இருக்கிறார்கள். உரிமை கோருபவர்களை சுட்டுக் கொல்ல முனையும் ஏகாதிபத்தியங்கள் போலவே, பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் தனது கரங்களைக் கறையாக்கிக் கொண்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலும் ஏற்பட்டுள்ள இடைக்கால உடன்பாடு, பிரெஞ்சு அரவணைப்புக்குட்பட்ட சுயாட்சி முறையையே டுனீசியாவிற்கு வழங்குவதாக உள்ளது. டுனீசியாவின் பாதுகாப்பும் வெளிநாட்டு உறவும், வழக்கம்போல் பிரான்சின் வசமே இருந்து வரும் எனக் கூறுகிறது புதிய உடன்பாடு.

உள்நாட்டு விவகாரத்தை கவனித்துக் கொள்வதில், டுனீசியாவிற்குக் கட்டுப்பாடற்ற உரிமை இருக்கிறது எனப் புதிய உடன்படிக்கை அறிவித்தபோதிலும், அங்குள்ள பிரெஞ்சுக்காரர்களின் எண்ணிக்கைக்கு கூடுதலான அளவு பிரதிநிதித்துவம், நகராட்சி நிறுவனங்களில் பிரெஞ்சுக்காரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், டுனீசியர்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை கூடுதலாக இருப்பதால், பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் ஏற்பட்டு விடுமோ என அஞ்சுவதற்குத் துளியும் இடமில்லாமல் இருக்கிறது.

முடிந்த ஏற்பாட்டிற்கான பேச்சு, மே மாதத்தில் துவங்க இருக்கிறது. அதற்குப் பல தடைகள் ஏற்பட இடமுண்டு என எண்ணுவதற்கு நியாயமிருக்கிறது; இருந்தாலும் டுனீசியா வெற்றி வாகை சூடும் என்பதில் ஐயத்திற்கு இனி மேல் இடமில்லை.

வட ஆப்பிரிக்காவில் பிரான்சுக்கு இதுவரை இருந்துவந்த பிடி இனி சிறுகச் சிறுக சரிந்துவிடும் என்ற உண்மையைத்தான் டுனீசியா உடன்பாடு எடுத்துக்காட்டுகிறது.

கடும் நடவடிக்கை மேற்கொள்வராம்!

அமைச்சர் தரும் எச்சரிக்கை

"திருப்திகரமாகச் செயலாற்ருமல், தொல்லை கொடுத்துவரும் பஞ்சாலைப் பகுதி எதுவானுலும் அதன்மீது சர்க்கார் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும்.

"தொழிலாளர் கிளர்ச்சி, நிதி பற்றுக்குறை, அல்லது நிர்வாகத்தில் ஊழல் போன்றவைகளான பாதகமான நிலைக்கு எது காரணமாக இருந்தாலும் அதனை சர்க்கார் உறுதியுடனும் உடனடியாகவும் சமாளிக்கும்."

இவ்வாறு, மத்திய சர்க்கார் தொழிலாளர் நல அமைச்சர் கந்துபாய் தேசாய், இந்திய தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் கழகத்தின் பொதுக் குழு உறுப்பினரிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

மாம்பழம் பரிசு!

பம்பாய், ஏப். 25—

பாண்டுங்கில் நடைபெறும் ஆசிய — ஆப்பிரிக்க மாநாடுகளில் கலந்துகொள்ளும் முக்கியஸ்தர்களுக்கு பண்டித நேரு மாம்பழங்கள் கொடுத்து மகிழ்விக்க இருக்கிருர் என்று தெரிகிறது.

இதற்காக பதின்மூன்று கூடை மாம்பழங்கள் இந்தியாவிலிருந்து ஜகார்தாவுக்கு விமான மூலம் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இரயில் கோச்சுகள்— ஹுப்ளியில் தயாராகும்

பெங்களூர், ஏப். 26—

ஹுப்ளியில் உள்ள ரயில்வே தொழிற்சாலையில் சீக்கிரமே ரயில்வேக் கோச்சுகள் தயார் செய்யப்படும் என்று தெரிகிறது. தென் பகுதி இரயில்வே அதிகாரி கர்னுடக வர்த்தக சபைக்கு இச்செய்தியைத் தெரிவித்திருக்கிருர்.

ஹுப்ளியில் ரயில்வே தொழிற்சாலையைக் கட்டுவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றனவென்றும், இதற்காக சுமார் ரூ. 103 லட்சம் செலவிடப்படுமென்றும் தெரிகிறது. இத்திட்டத்திற்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சட்டம் அவசியமா— சர்க்கார் ஆலோசனை

சென்னை மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களுக்கு இனமாக அளிக்கப்பட்ட நிலங்களை மேற்கொள்வதற்கு சட்டம் அவசியமா என்பது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறது என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிருர்.

டுனீசியாவுக்கு சுயாட்சி

'கருத்து வேற்றுமை இல்லை' என பிரதமர் அறிவிப்பு

பாரிஸ் விவரதங்களை முடித்துக் கொண்டு டுனீசியாவுக்குத் திரும்பிய டுனீசியப் பிரதமர் தார் பென் அமர், ஏராளமான டுனீசியர்களால் வரவேற்கப்பட்டார்.

"டுனீசிய சுய ஆட்சி பற்றி பாரிசில் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின்மீது டுனீசிய மக்களிடையே கருத்து வேற்றுமை எதும் இல்லை," என்று அவர் குறிப்பிட்டார்.

டுனீசியாவில் இருக்கும் பிரெஞ்சுக்காரர்கள் பயம் எதும் கொள்ள வேண்டியதில்லை என்றும், அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க பாரிஸ் ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது என்றும் டுனீசியப் பிரதமர் குறிப்பிட்டார்.

பார்வையிடுகிருர் இராசேந்திரர்!

வட்நாட்டில் பூட்டு தொழிற்சாலை; நதிமீது 99 அடி உயர அணைக்கட்டு

ஹசாரிபாக், ஏப். 24—

இந்திய ஜனதிபதி இராசேந்திர பிரசாத் பராகர் நதிமீது கட்டப்பட்டுள்ள 99 அடி உயரமுள்ள திலையா அணையைப் பார்வையிட்டார். இந்த அணையுடன் கட்டப்பட்டுள்ள மின்சார உற்பத்தி நிலையத்தையும் அவர் பார்வையிட்டார். இங்கே 4,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. இதன் மூலம் பீகார், கயா, சாரிப், நவாதா போன்ற நகரங்களுக்கும் மைகா சுரங்கத்திற்கும் மின்சாரம் கிடைக்கிறது.

பின்னர் இராசேந்திரர் அண்மையில் புதிதாகக் கட்டப்பட்ட பூட்டுத் தொழிற்சாலையைப் பார்வையிட்டார். திலையா அணைப் பகுதியில், மின்சார உதவியுடன் பூட்டு செய்யும் தொழிற்சாலை ஆரம்பிப்பது இதுவே முதலாவதாகும்.

ஆட்குறைப்புக்கு எதிராக!

பாதுகாப்பு இலாகா ஊழியர் நேரடி நடவடிக்கை

கல்கத்தா, ஏப். 25—

பாதுகாப்பு இலாகாவில் உள்ள சில அதிகாரிகளை திரும்பவும் அவர்களது பழைய பதவிகளுக்கு அனுப்ப வழி செய்வதற்காக 92 உயர்தர குமாஸ்தாக்களை கீழ்தர குமாஸ்தாக்களாக்குவதையும் அதனுல் 92 கீழ்தரக் குமாஸ்தாக்களுக்கு 'சீட்டு' கிழிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதையும் எதிர்த்து முறியடிக்க, நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்குமென அகில இந்திய பாதுகாப்பு இலாகா ஊழியர் சங்க தலைவியான திருமதி மைத்ரேயி போஸ் எச்சரித்திருக்கிருர் என்று தெரிய வருகிறது.

பாதுகாப்பு இலாகா இதுபற்றி மாநாடு ஒன்று கூட்டி நல்ல முடிவு எடுப்பது அவசியமெனவும் கூறப்பட்டிருக்கிறதாம்.

இந்திய சர்க்கார் அடக்குமுறை

பத்திரிகை சட்டப்படி இந்திய சர்க்கார் இதுவரை—1953 நவம்பர் முதல் 1955 ஜுன் வரை—93 வழக்குகள் தொடுத்திருக்கிறதாம்.

இச்செய்தியை இந்திய பாராளு மன்ற மேல்சபையில் அமைச்சர் பந்த் கூறினுர்.

52 வழக்குகளில் பறிமுதல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாயும், 12 வழக்குகளில் ஜாமீன் தொகை கேட்கப்பட்டதாகவும் ஆறு வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 22 வழக்குகள் இன்னும் முடிவடையவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிருர்.

பார்மோசா பிரச்சினை

சூ-என்-லாய் திட்டத்திற்கு சியாங்-கே-ஷேக் எதிர்ப்பு

தைப்பே, ஏப். 25—

"பார்மோசா பிரச்சினைக்காக சீனவுடன் நேரடி பேச்சு வார்த்தைகள் நடப்பதை தனது சர்க்கார் சிந்தனை செய்யாது," என்று, சியாங்-கே-ஷேக் அமெரிக்க தளபதி அட்மிரல் ஆர்தர் ராத்போர்டிடம் கூறியதாகத் தெரிகிறது

அதேபோல், குமாய் தீவுகளின் கரையோரப் பகுதிகளிலிருந்து சீன தேசியப் படைகளை திரும்பப் பெறுவதையும் சியாங்கின் சர்க்கார் எதிர்க்கிறதாம்

இதற்கிடையில் பாண்டுங் மாநாட்டில் சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் பேசிய பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, "சீன தன்னிடமுள்ள அமெரிக்கக் கைதிகளை விடுவிக்க வாய்ப்பு இருக்கிறது," என்று குறிப்பிட்டிருக்கிருர்.

"பார்மோசா பிரச்சினைக்கு தனக்கு சரியெனப்பட்ட ஒரு முடிவை சீனப் பிரதமர் கூறியிருக்கிருர்," என்றும் முகமது அலி தெரிவித்திருக்கிருர்

"பார்மோசா பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்கா உண்மை நோக்குடன் முற்பட்டால், சீன தன்னிடமுள்ள பதினெரு அமெரிக்கக் கைதிகளை விடுதலை செய்யும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரீட்சை உலகிலே புதுமை!

மாணவர்களே தேர்தல் நடத்திக்கொள்ளும்நிலை

அலகாபாத், ஏப். 24—

மாணவர்களின் பள்ளி இறுதி ஆண்டுத் தேர்தலின்போது ஆசிரியர்களின் மேற்பார்வையில்லாது மாணவர்களின் தேர்தல் இங்கே நடத்தப்படுகிறது.

இங்குள்ள சர்க்கார் கல்லூரி ஒன்றில் இதுபோன்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஆருவது வகுப்பு முதல் பதினேருவது வகுப்புவரை படிக்கும் மாணவர்கள் சுமார் 350 பேர் தாங்களே ஆசிரியர்களின் உதவியின்றியும், கண்டிப்பான மேற்பார்வையில்லாதபடியும் தேர்வு எழுதுகிருர்கள்.

மாணவர்கள் தாங்களே தங்களுக்குள்ள வினுத் தாள்களையும், பதில் எழுதும் தாள்களையும் கொடுத்துக்கொள்கிருர்கள்.

இந்த புதுமையான ஏற்பாடு இப்போது இரண்டாவது தடவையாக நடைபெறுகிறது.

மாணவர்களிடையே ஒழுங்கையும், நன்னம்பிக்கையையும் உண்டாக்கவே இந்த ஏற்பாடு என்று கல்லூரி அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தத் தேர்தல் எப்படி நடைபெறுகிறது என்பதை நேரில் கண்டறிய உ. பி. கல்வி இலாகா அமைச்சர் கோவிந்தசிங் கல்லூரிக்குச் சென்றிருந்தார்.

எதிர்ப்பு உணர்வை நீக்க முயற்சி

இந்திய சர்க்கார் திட்டம்

'நாகர்கள் தலைவர்கள் செய்து வரும் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு மறுப்புப் பிரச்சாரம் செய்யவும், நாகர்களின் தேசீயக் கவுன்சில் குழு மனதில் உள்ள எதிர்ப்பு உணர்ச்சியைப் போக்கி அவர்கள் புரியும் தவறைத் திருத்தவும் சர்க்கார் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவருகிறது," என்று இந்திய பாராளுமன்ற மேல் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பண்டித பந்த் கூறினுர்.

‘வேதனை’ உருவாக்கிய கொள்ளைக்காரன்!

மான்சிங் வாழ்க்கை—ஒரு படப்பிடிப்பு

குவாலியர், ஏப். —26

உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பாரத், விந்தியப் பிரதேசம் ஆகிய நான்கு மாநில சர்க்கார்களை நடுங்கச் செய்துவரும் மான்சிங் என்ற கொள்ளைக்காரரை அப்பகுதிகளில் வாழும் மக்கள் ‘ராஜா மான்சிங்’ என்று அழைக்கிறார்களாம்.

மான்சிங் கடந்த 27 ஆண்டுகளாக மேலே சொல்லப்பட்ட நான்கு பகுதிகளில் பயங்கரவாதியாக இருந்து வருகிறார்.

அவர், ஆக்ரா மாவட்டத்தில் ஜமீன்தாராக இருந்தவர்

கடந்த 25 ஆண்டுகளில், மான்சிங், சுமார் 185 கொலைகளைச் செய்தும், எண்ணிலடங்கா கொள்ளைகளையும் நடத்தி, ஆயிரக்கணக்கான பணக்காரர்களைத் தூக்கிச் சென்றுமிருக்கிறார்.

மான்சிங்கின் கொட்டத்தை அடக்க நான்கு மாநில அரசுகளும் ஒன்று சேர்ந்து, 2,000 பேர் கொண்ட போலீஸ் படை ஒன்றை நிறுவியுள்ளனர். இவர்களுடன் மத்திய சர்க்காரின் இரு பிரிவு போலீஸ் படையினர் உள்ளனர்.

மான்சிங்கின் கூட்டத்தார் கொள்ளை நடத்தும்போது அவர்கள் எண்ணிக்கை 50-க்கு மேல் இருப்பதில்லையாம்; என்றாலும், அவர்களைப் பிடிக்க போலீசாரால் இயலவில்லை என்று சொல்லப்படுகிறது.

ஒரு தலை முறையாக அப்பகுதி மக்கள் இக்கொள்ளைக்காரர்களைக் கண்டு அஞ்சவும், மரியாதை செய்யவும் கற்றுள்ளனர் என்று சொல்லலாம்!

‘ராபின்ஹூட்’ போன்ற வீரர்களின் கதையை இப்பகுதி மக்கள் கேட்டிருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் இப்போது மான்சிங்கின் செயல்களை நேரிலேயே கண்டு வருகின்றனர்.

மான்சிங் அட்டகாசம் செய்யும் இப்பகுதிகள் சரித்திர காலந்தொட்டு கொள்ளைக் கூட்டத்தின் இருப்பிடமாகவே இருந்து வருகிறதாம். மொகலாய மன்னர்கள் கூட இப்பகுதியில் கொள்ளைக் கூட்டம் வாழ்ந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்களாம்.

இப்போது, ‘பெரும் கொள்ளைக்காரன்’ என்று கருதப்படும் மான்சிங், 1952-ம் ஆண்டில், உத்திரப் பிரதேச அதிகாரிகள் பலருடன் நட்பு முறையில் பழகி வந்தது குறிப்பிடத்தக்கது. தனது மகனுக்கு திருமணம் நடைபெற்ற போதும், மற்ற விழாக்களின் போதும் மான்சிங் பல பெரும் புள்ளிகளுடன் பரிசுகள் தந்தும்—பெற்றும் பழகினார் என்று தெரிகிறது.

போலீசார், மான்சிங்கின் மகன் தெசில்தாரைக் கைது செய்துள்ளனர். இப்போது மான்சிங், சர்க்காரிடம் கருணையை எதிர்பார்ப்பதாகச் சொல்லப்படுகிறது.

மான்சிங்கின் இந்த வாழ்வு, பல ஆண்டுகளுக்கு முன்னர் அவர் பார்ப்பனரையும், பனியா ஒருவரையும் கொலைசெய்து ஆயுள் தண்டனை அடைந்தபோது ஆரம்பமாயிற்றாம்; ‘அதிக வேதனை’தான் இந்த கொள்ளைக்காரனை உருவாக்கியதாம்.

உ. பி-யின் முதலமைச்சராக இருந்த பண்டித பந்த் இப்போது மத்திய சர்க்காரில் அமைச்சராக இருந்துகொண்டு, மான்சிங்கைப் பிடிக்க முயற்சிக்கிறார்.

அலிகார் பல்கலைக் கழகம்

ஜின்னா நன்கொடை அளித்தாரா?

புதுடில்லி, ஏப். 25—

“காலஞ்சென்ற முகமது அலி ஜின்னா தனது சொத்துக்களில் சிலவற்றை அலிகார் பல்கலைக் கழகத்திற்கு எழுதி வைத்திருப்பது உண்மையா?” என்று இந்தியப் பாராளுமன்ற மேல் சபையில் கேட்கப்பட்டது.

அதுபற்றி அலிகார் பல்கலைக்கழகத்திற்கு செய்தி எதும்கிடையாது என்றும், சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து அறிவிப்பு எதுமின்றி பல்கலைக் கழகம் இதுபற்றி விசாரணைகள் நடத்த முடியாது என்றும் சர்க்கார் தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜின்னாவின் சுயசரிதை ஒன்றில், ஜின்னா தனது சொத்துக்கள் சிலவற்றை அலிகார் பல்கலைக் கழகத்திற்கு அளித்துள்ளதாகக் காணப்பட்டதாம். இதைச் சுட்டிக் காட்டித்தான் மேல் சபையில் இப்பிரச்னை பற்றி கேள்வி கேட்கப்பட்டது.

விவசாயப் பள்ளிகள்

மத்திய சர்க்கார் ரூ. 265 லட்சம் செலவிடும்

மேலும் பல ஆதார விவசாயப் பள்ளிகளைத் துவக்கவும், விரிவுபடுத்தும் பயிற்சி நிறுவனங்கள் துவக்கவும், மாநிலங்களில் ரூ 265-லட்சத்து 21 ஆயிரம் செலவு செய்ய மத்திய சர்க்கார் அனுமதி அளித்துள்ளனராம்.

இந்தியா முழுவதிலுமாக, ‘தேசிய விஸ்தரிப்பு சர்வீசை’ப் பரப்ப இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவு காலத்திற்குள் 3,800 விஸ்தரிப்புத் திட்ட கேந்திரங்கள் நிறுவப்படலாமெனக் கூறப்படுகிறது.

இப்போது 823 சமூக நல, விஸ்தரிப்பு கேந்திரங்கள் உள்ளன.

அதிகப்படியான கேந்திரங்களுக்கு 38,000 கிராம ஊழியர்கள் தேவைப்படுமாம்.

ரூப் நாராயண்பூரில் உள்ள இந்துஸ்தான் கேபிள் உற்பத்தி சாலை, 1954 செப்டம்பர் 1-ந் தேதியன்று உற்பத்தி துவக்கியதிலிருந்து 1954 டிசம்பர் 31-ந் தேதி வரை மொத்தம் 48 மைல் நீளமுள்ள கேபிள்களை உற்பத்தி செய்திருக்கிறது.

“‘மகா பஞ்சாப்’ கோரிக்கை வகுப்புவாத நோக்கங் கொண்டது”

மாநில காங்கிரஸ் சர்க்கார் மீது பிரதேச காங்கிரஸ் பாய்ச்சல்

ஜலந்தர், ஏப். 25—

பஞ்சாப் சர்க்கார், மாநில புனரமைப்புக் குழுவிடம், ‘மகா பஞ்சாப்’ மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி மனு தந்ததை பஞ்சாப் மாநில காங்கிரசார் பலர் கண்டித்திருக்கின்றனர்.

மாநில காங்கிரஸ் செயற் குழு, மாநில புனரமைப்புக் குழுவிடம் தருவதற்கான மனு ஒன்றைத் தயாரிப்பதற்காக, ஒரு துணைக் குழு நியமித்தது.

அமர்நாத் வித்தியாலங்கர் என்பவர் தலைமையில் இருந்த அந்த துணைக் குழு, மாநிலத்தின் எதிர்காலம் பற்றி திட்டவட்டமான முடிவு மேற்கொள்வதில் ஆழமான கருத்துடையதாயிருந்தது. இதனால் மனு தயாரிக்கப்பட முடியவில்லை.

துணைக் குழுவிலிருந்த பெரும்பான்மையினர் ‘மகா பஞ்சாப்’ மாநிலக் கோரிக்கையை ஆதரித்தனர். சிலர் கோரிக்கையை வன்மையாக எதிர்த்திருக்கின்றனர்.

பின்னர் கூடிய பிரதேச காங்கிரஸ் செயற் குழு, மாநில புனரமைப்புக் குழுவிடம் மனு தருவதையே கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது.

‘மகா பஞ்சாப்’ மாநிலத்திற்காக, நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களினால் பல வகுப்பாரிடையே நிலவும் சமூக உறவுக்கு உலைவைக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறதாம்.

‘மகா பஞ்சாப்’ கோரிக்கை ‘வகுப்புவாத’ நோக்கம் கொண்டது. எனவே, காங்கிரசார் அதில் பங்கு பெறக் கூடாதென காங்கிரஸ் செயற் குழு கூறியுள்ளது.

இந்தியாவின் தேசிய வருமானம் உயர்கிறதாம்!

இந்தியாவின் தேசிய வருமானம் சென்ற ஆண்டில் உயர்ந்து காணப்பட்டதாம்.

1953-54-ம் ஆண்டில் இந்தியாவின் தேசிய வருமானம் ரூ. 10,600 கோடி என்றும், 1952—53-ல் இந்த வருமானம் ரூ. 9,860 கோடி என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்கார் இந்தப் புள்ளி விபரங்களை வெளியிட்டிருக்கிறது.

இந்தியர் ஒருவரின் சராசரி வருமானம் 1952—53-ல் ரூ. 267.4 என்றும், 1953—54-ல் இந்த வருமானம் ரூ. 274.6 ஆக உயர்ந்தது என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

1948-ம் ஆண்டு முதல் 1950 வரை இந்தியரின் சராசரி வருமானம் எட்டு சத விகிதம் அதிகரித்திருக்கிறதாம்.

மலைவாழ் மக்களிடையே மாசு!

நீலகிரியில் நிறபேதம்

உதகமண்டலம், ஏப். 25—

இங்குள்ள இந்திய ஊழியர் பள்ளி சென்ற ஒரு வார காலமாக மூடப்பட்டிருக்கிறது.

தோடர்களுக்கும்—கோடர்களுக்கும் ஏற்பட்டுள்ள இனவேற்றுமையே இதற்குக் காரணமாகும்.

தோடர் இனத்தைச் சேர்ந்த குழந்தைகள் மட்டும் இப்பள்ளியில் படித்து வந்தனவாம்.

இப்பள்ளியை நடத்தும் அதிகாரியான எல். என். ராவ், உதகமண்டலத்திற்கு அருகே உள்ள கிராமங்களிலிருந்து சுமார் 33 கோடர் இனக் குழந்தைகளை இப்பள்ளியில் சேர்த்துவிட்டார்.

தோடர்கள் என்ற மலை வகுப்பினர், கோடர்கள் என்ற மலை வாழ் மக்களை தீண்டப்படாதவர்கள் என்று கருதுகின்றனர்; தீண்டப்படாதவர் குழந்தைகளுடன் தங்கள் குழந்தைகளை உட்கார அனுமதிக்க மறுத்து தோடர் இனப் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திக் கொண்டனர். அடுத்த நாள் கோடர் வகுப்பு குழந்தைகளும் பள்ளியைவிட்டு வெளியேறிவிட்டனர் என்று தெரிகிறது.

பின்னர் நடைபெற்ற தோடர்கள் கூட்டமொன்றில், ‘கோடர்கள் குழந்தைகளை தனியாக உட்கார வைப்பதென்றால் தங்கள் சிறுவர்களை பள்ளிக்கு அனுப்பலாம்,’ என்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இப்பள்ளியில் பெண்கள் உள்பட 34 தோடர் இனத்தவர் படிக்கின்றனர். இவர்களுக்கு இலவசமாகக் கல்வி, உணவு, உடை, மாணவர் விடுதி வசதிகள் அனைத்தும் அளிக்கப்படுகின்றன.

தெருக்களைக் கூட்டுமாறு நேருவுக்குக் கோரிக்கை!

பம்பாயில் கையெழுத்து இயக்கம் ஆரம்பம்

பம்பாய், ஏப். 25—

‘பண்டித நேருவும், ஆச்சாரியா விநோபா பாவேயும் நாள்தோறும், காலையில் ஒரு ஐந்து நிமிட நேரம் தெருக்களைச் சுத்தம் செய்ய வேண்டும்,’ என்று பம்பாய் பொதுமக்கள் கேட்டுக்கொள்ள இருக்கிறார்கள்.

மேற்கண்ட இருவரும் நாள்தோறும் இப்படிச் செய்வது மற்றவர்கள் மனதில் உணர்ச்சியைத் தூண்டி, சமூக நீதியை உணரச் செய்யலாம் என்று பொதுமக்களில் பலர் கருதுகிறார்களாம்.

பொது மக்கள் நடமாடும் தெருக்களை, பண்டித நேருவும், விநோபா பாவேயும் கூட்டவேண்டுமென்று தாங்கள் கோரப்போவதாக பி. எம். பாபட் என்பவர் பத்திரிகையாளர் மாநாடொன்றில் கூறியுள்ளார். இவர், பம்பாயில் ஒரு சமூக ஊழியர் என்று தெரிகிறது.

பொது மக்களிடம் இந்த வேண்டுகோளுக்காக ஏராளமான கையெழுத்துக்கள் வாங்கப்படுகின்றன.

இதுவரை கையெழுத்திட்டவர்களில் சௌந்தே மகராஜ், காட்ஜு மகாராஜ் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

சேரி மக்கள் வெளியேற்றம்

தடுக்க சென்னை சர்க்கார் ஆலோசனை

சென்னை, ஏப். 25—

சேரிகளில் குடியிருக்கும் மக்கள் வெளியேற்றப்படுவதைத் தடுக்கும் வழி முறைகளை சென்னை சர்க்கார் ஆலோசித்து வருகிறது.

நகரிலும், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் உள்ள நிலைமையைச் சமாளிக்க சர்க்கார் சிந்திக்கிறதாம்.

சேரிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்படுவதை தடுக்கக் கோரி சர்க்காருக்கு அடிக்கடி விண்ணப்பங்கள் வந்ததை யொட்டியே சர்க்கார் இப்பிரச்சினை பற்றி யோசிக்கிறதாம்.

இதற்கென சட்டமியற்றுவது அவசியமென்றால், இப்போது சட்டசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பது சுட்டிக் காட்டப்படுகிறது. ஆனால் அவசர நடவடிக்கைகள் எடுக்க சர்க்காருக்கு தடை எதும் கிடையாது என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

கிழக்கு வங்க ஐக்கிய முன்னணி

அவாமி லீக் வெளியேற்றப்பட்டது

டாக்கா, ஏப். 25—

சென்ற வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற கிழக்கு வங்க ஐக்கிய முன்னணி பார்லிமென்டரி கட்சியின் கூட்டத்தில், அவாமிலீகினரை வெளியேற்ற தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பஸ்லுல் ஹக் ஆதரவாளர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

இதன் மூலம் ஐக்கிய பார்லிமென்டரி கட்சியின் ஒரு முக்கிய அங்கமான அவாமி லீக் வெளியேற்றப்பட்டது.

சல்பேட் உர உற்பத்தி

சிந்திரி இரசாயன உர உற்பத்தி சாலையில், 1954 எப்ரல் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை மொத்தம் 1,35,000 டன் அம்மோனியம் சல்பேட் உரம் உற்பத்தி செய்யப்பட்டது; 1953-ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் உற்பத்தியானது 1,28,000 டன்.

செய்திச் சுருள்

வீரவநல்லூர் தேசிய ஆலைத் தொழிலாளர் மகாசபைக் கூட்டம்

20—4—55-ல், தோழர் எம். முத்துக்கண்ணு தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: எம். முத்துக்கண்ணு; துணைத் தலைவர்: எம். எ. ராமசாமி; செயலாளர்: எம். எ. எஸ். சுப்பையா; துணைச் செயலாளர்: வி. சீனிவாசன்; பொருளாளர்: கா. சங்கரலிங்கம்; மற்றும் 15 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்க ஆலோசனையாளர்களாகத் தோழர்கள் எ. நல்லசிவன், ஆர். வி. அனந்தகிருஷ்ணன், எம். ராஜு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

கோவை தியாகராயர் படிப்பகம்

22—4—55 காலை 10 மணிக்கு நடைபெற்ற படிப்பக உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; தலைவர்: ஆர் கே. வேலாசாமி; துணைத் தலைவர்: எம். பட்டிலிங்கம்; செயலாளர்: ஜி. சி. துரைசாமி; துணைச் செயலாளர்: எம். கே. எ. நடராசன்; பொருளாளர்: ஜி. கோவிந்தன்; செயற்குழு உறுப்பினர்கள்: சி. கே. சுப்பிரமணி, கே. சிவசாமி, ஆர். வெங்கடாசலம், எஸ். டி. சிதம்பரம்.

பெயர் சூட்டல்

சென்னை, வண்ணை தோழர் பி. எ. என். இராசரத்தினம் அவர்களது துணைவியார் தோழியர் கமலாவதி அம்மையார், விருதுநகரில் 22—4—55 இரவு 1-20 மணிக்கு ஆண் மகவொன்றுக்குத் தாயானார். குழந்தைக்கு ‘செயராசன்’ என்று பெயரிடப்பட்டதின் நினைவாக ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திருமணங்கள்

வடஆற்காடு மாவட்டம் சாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த தோழர் எஸ். ஆர். கண்ணன்—தோழியர் டி. சி. ஆதிலட்சுமி திருமணம், 24—4—55 மாலை 4½ மணியளவில், பெங்களூர் பெரியார் நகர் தி. மு. கழகச் சார்பில், தோழர் எ. எம். தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் எஸ். ஜெ. உசேன், மு. சி. வில்லவன்கோதை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. பெற்றுக் கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

20—4—55 காலை 10 மணிக்கு, தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில், தேவகோட்டையில் தோழர் புகழேந்தியன் — தோழியர் கண்ணம்மாள் அம்மையார் திருமணம் நடைபெற்றது. தோழர் சிற்றரசு அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

‘எல்லைப்புறத்தில் வாழும் தமிழர்கள் இன்னல்களைப் போக்க வேண்டும்’

ஆந்திர சட்டசபை உறுப்பினர்கள் கோரிக்கை

கர்னூல், எப். 26—
ஆந்திர சட்டசபையில் கவர்னர் நிகழ்த்திய உரைமீது நடைபெறும் விவாதத்தின் இரண்டாம் நாளன்று, எல்லைப்புற தொகுதி உறுப்பினர்களான திரு. அரங்கநாத முதலியார், கோபாலரெட்டி ஆகிய இருவரும் ஆந்திர நாட்டின் தென் எல்லைப்புறத்தில் வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்கு பள்ளிகளில் தமிழ் படிக்க வசதிகள் செய்துதர வேண்டும் என்றும், சித்தூர் மாவட்டத்தில் உள்ள 3 லட்சம் தமிழர்களின் நிலைமையும், மைசூர் மாநிலத்தில் உள்ள பெல்லாரி மாவட்டத்திலும், ஒரிசா மாநிலத்திலும் வாழும் தெலுங்கர்களின் நிலையும் ஒன்றுதான் என்றும் சுட்டிக்காட்டி, ‘தமிழர்களின் இன்னல்களைப் போக்க வேண்டும்’ என்றும் பேசியிருக்கின்றனர்.

ஐக்கிய கர்நாடக அமைப்பு

ஐக்கிய கர்நாடகம் அமைக்க வேண்டும் என்பதுபற்றி கடந்த எட்டு நாட்களாய் மைசூர் சட்டசபையில் விவாதம் நடைபெற்று முடிந்திருக்கிறது.

விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களில் பெரும் பகுதியினர், மைசூர் உட்பட கன்னடம் பேசப்படும் பகுதிகளை எல்லாம் ஒன்றாக இணைத்து ஒரு கர்நாடக மாநிலம் அமைக்கவேண்டும் என்று கோரியுள்ளனர்.

விவாதத்திற்கு சர்க்கார் தரப்பில் பதில் எதும் தரப்படவில்லை.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கிணங்க, சர்க்கார் தனது கருத்தை எதையும் அறிவிக்காமல், சபையின் நடவடிக்கைகளை மட்டும் மாநில புனரமைப்புக் குழுவிற்கு அனுப்பிவைக்கும் எனத் தெரிகிறது.

விவசாயிகளுக்கு கடன் வசதி

கூட்டுறவு முறையில் கிடைக்க ஏற்பாடு

பத்து கோடி ரூபாய் மூலதனத்துடன் தேசிய விவசாயக் கடன் நிதியுடனும் (நீண்ட காலம்), தேசிய விவசாய நிதியை ரூ ஒரு கோடி மூலதனத்துடனும் துவங்க ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரம் அளிக்கும் மசோதா, ‘ரிசர்வ் பாங்கி திருத்த மசோதா’ என்ற பெயரில் மக்கள் சபையில் நிறைவேறியுள்ளது.

மசோதாவைக் கொண்டுவந்து பேசிய ரெவினியூ மந்திரி ஏ. சி. குஹா பேசுகையில், நிதிகளுக்கு இருக்கவேண்டிய குறைந்த பட்சத் தொகையே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மசோதாவினால் கிடைக்கும் இதர பலன்கள் குறித்துப் பேசுகையில் அவர், இனி சொந்த உறுதி மொழியின் பேரிலும், சாகுபடியில் உள்ள பயிர்கள் மீதும் கடன்கள் தரப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

மசோதாவின்படி களஞ்சியங்கள் ஏற்படுத்தப்பட்டு அங்கு கொண்டு வந்து அடகு வைக்கப்படும் விவசாயப் பொருள்கள்மீதும் கடன் தரப்படும் என்றும் அவர் தகவல் தந்தார்.

அனுமதி கிடைக்கிறது!

புதுடில்லி, எப். 26—
நிலக்கடலை கூட்டுறவு சங்கங்கள், அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்கள் மூலம் இவ்வருடம் ஜூலை முடிய 1,50,000 டன் நிலக்கடலை ஏற்றுமதி செய்ய, இந்தியப் பேரரசு அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

மோட்சம் கிடைத்திருக்குமே!

இராஜ்கோட், எப். 26—
ஜெயினர்களின் ‘யாத்திரை’ நிலையமான சேத்ருஞ்ஜயாவில் எப்ரல் 4-ந் தேதியன்று அனல் காற்று வீசியதால், மூன்று ‘யாத்திரீகர்கள்’ மரணமடைந்தனர் என்றும், பலர் மூர்ச்சையடைந்தனர் என்றும் தெரிகிறது.

லோகியா விடுதலை: மீண்டும் கைது!

இம்பால், எப். 26—
ம. சோ. கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியாவும், மற்றும் இருவர்களும் ‘ஹேபியஸ் கார்பஸ்’ மனுதாக்கல் செய்யப்பட்டதின் பேரில், மணிப்பூர் நீதி இலாகா கமிஷனரால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், லோகியாவும் மணிப்பூர் ம. சோ. கட்சித் தலைவர் லாயில் ராம் அச்சாசிங் என்பவரும் சிறைவாயிலிலேயே தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் மீண்டும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

மணிப்பூரில் 144 தடையுத்தரவை மீறியதாக லோகியாவும், இதரர்களும் கடந்த ஏப் 11-ந் தேதி கைது செய்யப்பட்டனர்.

சீன மே தின விழாவில் ஏ. எஸ். இராசன்

அகில — இந்திய தபால் ஊழியர் சங்க பொதுச் செயலாளரான தோழர் ஏ. எஸ். இராசன், சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பீகிங் நகரில் நடைபெறும் மே தின விழாவில் கலந்துகொள்வதற்காகக் கடந்த 24-ந் தேதியன்று டெல்லியிலிருந்து புறப்பட்டு விட்டார் என்று தெரிகிறது.

ஆஸ்திரிய உடன்படிக்கை —பூர்வாங்க ஏற்பாடுகள்

வியன்னாவில் மே மாதம் 2-ந் தேதியன்று 4 வல்லரசுத் தூதுவர்கள் கூடிப் பேசுவதற்கு ரஷ்யா சம்மதம் தெரிவித்திருக்கிறது.

ஆஸ்திரிய அரசாங்க உடன்படிக்கை பற்றி பேச நான்கு வல்லரசு அயல்நாட்டு மந்திரிகள் மாநாடு ஒன்றில் கூடுவதற்கான வழிவகை செய்வதே தூதுவர்கள் கூடுவதின் நோக்கம்.

மேலைக்கே தாலி— கழுத்தே சுகமாயிரு!

சிங்கப்பூர், எப். 26—
இன்னும் 5 ஆண்டுகளில் மலேயாவுக்கு சுயாட்சி வழங்க பாடுபடப் போவதாக சிங்கப்பூர் சட்ட சபையில் முதன் மந்திரி டேவிட் மார்ஷல் கூறியிருக்கிறார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது சட்ட சபை இதுவாகும்.

கழகக் கூட்டம்

★

முக்கூடல்
காந்தி திடல் பாண்டியனூர் அரங்கில்
29—4—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. வி. கே. சாமி
பேசுபவர்: ஈ. வெ. கி. சம்பத்

★★★★★★ ★★★★★★★★★★★★★

அன்பர்களுக்கு வேண்டுகோள்

★

அன்பரீர்,

24—4—55-ல், தி. மு. கழகப் பொதுக்குழு என்னைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறபடியாலும், ‘நம் நாடு’ ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறபடியாலும், இனி, ‘பொதுச்செயலாளர், தி. மு. க.’ என்ற முகவரிக்கும், ‘ஆசிரியர், நம் நாடு,’ என்ற முகவரிக்கும் அனுப்பும் கடிதங்கள், ரிஜிஸ்டர், மணியார்டர் ஆகியவைகளில், ‘இரா. நெடுஞ்செழியன்,’ என்று பெயரிட்டு அனுப்பக் கோருகிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்

கொத்தலாவலை மீது கண்டனப் பிரரேபணை

பாண்டுங்கில் அவரது போக்கின் எதிரொலி

இலங்கை மக்கள் சபையில் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 26—
பாண்டுங் மாநாட்டில் பிரதமர் கொத்தலாவலை நடந்துகொண்ட முறையைக் கண்டிக்கும் பிரரேபணை ஒன்றை, எதிர்க் கட்சித் தலைவர் பண்டார நாயகா, கொத்தலாவலை இலங்கை மக்கள் சபைக்கு வந்ததும் கொண்டுவந்தார்.

பிரதமர் கொத்தலாவலை, பாண்டுங்கிலிருந்து திரும்பியதும் மக்கள் சபையில் சுருக்கமான அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். அதன் பின் கண்டனப் பிரரேபணை கொண்டு வரப்பட்டது.

அதுபற்றிப் பேசுகையில் கொத்தலாவலை, தான் இதை எதிர்பார்த்ததாகவும், சிங்களத்தின் பழக்க வழக்கத்திற்கு இது பொருத்தமானதுதான் என்றும் தெரிவித்திருக்கிறார்.

“28 நாடுகளின் பிரதமர்களைச் சந்தித்து விட்டு இப்போதுதான் வந்திருக்கிறேன்; எனவே, 24 எதிர்க் கட்சி உறுப்பினர்களை சமாளிப்பது பற்றி நான் ஒன்றும் பயப்படவில்லை,” என்றும் கூறியுள்ளார்.

கண்டனப் பிரரேபணை விவாதம் நடைபெறும் என்று தெரிய வருகிறது.

இந்தியாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள்

சலுகை தரப்படுகிறது

கொழும்பு, எப். 26—
இந்தியாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களுக்கு இனி ஓராண்டு ‘விசாக்கள்’ வழங்கப்படும்: இதைக்கொண்டு, ஆண்டிற்கு மூன்று முறை இலங்கைக்குப் போய்வர முடியும்.

முன்பிருந்த மூன்றுமாத ‘விசா’ முறைக்குப் பதிலாக இது வழங்கப்படுகிறதாம். அந்தப் பழைய முறையினால், ஓராண்டிற்கு ஒரு முறைதான் போய்வர முடியும்.

இதனால், இந்தியாவில் கல்வி பயிலும் மூவாயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைவர் என்று தெரியவருகிறது.

இந்தியா—இலங்கை ஒப்பந்தம்

அமுல் நடத்துவதில் உள்ள தடைகள்

அதிகாரிகள் கூடி யோசிப்பராம்

கொழும்பு, எப். 26—
இந்தியா—இலங்கை ஒப்பந்தம் சம்பந்தமாக இலங்கை அதிகாரிகள், இந்தியத் தூதுவராலய அதிகாரிகள் ஆகியோரை அடுத்த வாரம் இலங்கைப் பிரதமர் கோத்தலாவலை கூட்டிப் பேசவிருக்கிறார் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குடி உரிமை கோருவோரைப் பதிவு செய்யவில்லை என்று இரு சாரார் சார்பிலும் கூறப்படும் குற்றச்சாட்டுகளால், இந்தியா—இலங்கை குடிஉரிமை ஒப்பந்தம், அமுல் செய்யப்படுவதற்கு தடைகள் ஏற்படுவதால், அவைகளை நீக்கவே இக்கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரிகிறது.

ஒப்பந்தத்தை, இலங்கை அதிகாரிகளோ, இந்தியத் தூதுவராலய அதிகாரிகளோ சரிவர அமுல் நடத்தவில்லை என்று இலங்கைப் பிரதமர் கருதுகிறாராம்.

இப்பிரச்சினைகள் பற்றி பாண்டுங் மாநாட்டின்போது, பிரதமர் நேருவுடன் கலந்தாலோசிக்க இருந்ததாகவும், ஆனால் அங்கு கலந்தாலோசிக்க முடியாதவாறு மாநாட்டின் இதர வேலைகள் நிரம்ப இருந்தனவென்றும் கொத்தலாவலை கூறியிருக்கிறார்.

குடி உரிமைப் பதிவு

துரிதப்படுத்த ஏற்பாடுகள்

இலங்கை குடிஉரிமை மனுக்களை விரைவில் பைசல் செய்வதற்கு சௌகரியமாக, பற்பல ஊர்களில் அலுவலகங்கள் திறக்க இலங்கை சர்க்கார் முடிவு செய்துள்ளதுதாம்.

இதற்கான ஏற்பாடுகள் கூட முடிவடைந்துவிட்டனவாம்.

மொத்தம் 27 மாவட்ட அலுவலகங்கள் திறக்கவும், 30 உதவி பதிவு கமிஷனர்கள் நியமிக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகிறதாம்.

சர்க்கரை தேக்கம்

உற்பத்தி அதிகரிப்பின் விளைவாம்

புதுடில்லி, ஏப் 26—
சர்க்கரை ஏராளமாகத் தேங்கிக் கிடப்பதாகவும், விலைச் சரிவைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உற்பத்தியாளர் கூறுகின்றனர்.

“சென்ற ஆண்டில் 10 லட்சம் டன் உற்பத்தியாயிற்று; இந்த ஆண்டு 15 லட்சம் டன் உற்பத்தியாகியுள்ளது; எனவே, விலைச் சரிவைத் தடுக்க, ஆண்டுதோறும் இறக்குமதியாகும் 5 லட்சம் டன் சர்க்கரையை நிறுத்தவேண்டும்; மணங்கிற்கு ரூ. 1—6—0 வீதம் விதிக்கப்படும் சுங்க வரியை ரத்து செய்ய வேண்டும்; மார்க்கெட்டில் சர்க்கரை குவிந்துவிடாதபடி இன்னும் கண்டிப்பான முறையில் பகிரங்க மார்க்கெட் விற்பனைக்கு சர்க்கரையை அனுப்பவேண்டும்,”

என்று, உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கூறியுள்ளார்.

ஆசிய நாடுகளுக்கு ரூ. 50 லட்சம் உதவி

ரஷ்யாவும் தர முன்வருகிறது

புதுடில்லி, எப். 26—
ஐ. நா. சபையில் விரிவுபடுத்தப்பட்ட நுணுக்கத் தொழில் ஒத்துழைப்பு நிறுவனத்திடம் ஆசிய நாடுகளுக்காக ரூ 50 லட்சம் வழங்க, ரஷ்யா ஒப்புக்கொண்டிருப்பதாக ரெவினியூ மந்திரி எம். சி. ஷா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

நிபுணர்களைப் பெறுவதற்கோ நுணுக்கக் கருவிகளைப் பெறுவதற்கோ அத்தொகை பயன்படுத்தப்படும் என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவுக்கு உபயோகப்படக்கூடிய நிபுணர்களும், கருவிகளும் கிடைக்கக் கூடுமா என்பதை அறிய 18 அதிகாரிகளை ரஷ்யாவுக்கு அனுப்பிவைக்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருப்பதாக ஷா தெரிவித்திருக்கிறார்.

நுணுக்க உதவித் திட்டத்தின் கீழ் ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளிடையே ஒப்பந்தம் எதுமில்லை என்றும், அதற்கு அவசியமில்லையென்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவுக்கு உதவி அளிக்க மேலும் 50 லட்சம் ‘குரோனர்’ (70,000 டாலர்) நார்வே சட்ட சபை ஒதுக்கியுள்ளது. இதைச் சேர்த்து இந்த நிதியில் மொத்தம் 3,70,000 டாலர் உள்ளது.

சிந்திரி உரத்தொழிற்சாலை விஸ்தரிப்பு

புதிய அலுவலகக் கல்நாட்டு விழா

சிந்திரி செயற்கை உரத் தொழிற்சாலை 1951-ல் பணி புரியத் துவங்கியபோது, 7,445 டன் அம்மோனியம் சல்பேட்டையே உற்பத்தி செய்தது; ஆனால், 1954—55-ல், 23,983 டன்னாக உற்பத்தி கூடியது. 1955—56-ல், 3,20,000 டன்னாக உற்பத்தி பெருகக் கூடுமெனவும், அடுத்த ஆண்டில் அது மேலும் கூடுதலாகும் என நம்புவதாகவும் தொழிற்சாலையின் மானேஜிங் டைரக்டர் அறிவித்துள்ளார்.

ரூ. 15 இலட்சம் செலவில், 51,076 சதுர அடி விஸ்தீரணமுள்ளதான அலுவலகக் கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. அத்தொழிற்சாலையில் ஊழியம் செய்து வரும் 2,000 குமாஸ்தாக்களுக்கு பணியாற்றும் வசதியுடைய அலுவலகமாக புதிய கட்டிடம் இருக்கும். இப்பொழுது, அவர்களில் பலர் குடிசைகளில் வேலை செய்து வருகின்றனர்.

இப்புதிய கட்டிடத்திற்கு, தலைவர் இராஜேந்திர பிரசாத் கால்கோல் விழா செய்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, மேற்படி தொழிற்சாலை தீவிர முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும், புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலக்கரி அடுப்பின் புகை ஆவியை வீணாக்காமல், அதன் உதவி கொண்டும் அமோனியம் உற்பத்தியைப் பெருக்குவதற்கான இயந்திர அமைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது மகிழ்ச்சிக்குரியது என்றும், ராஷ்டிரபதி தலைவர் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.